செய்தி வெளியீடு எண் : 1117 நாள் : 22.05.2025

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் 22.05.2025 அன்று மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை திட்டங்கள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.**

மாண்புமிகு மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 22.05.2025 அன்று கடல் மீனவர்களுக்கு மீன்பிடி தடை கால நிவாரணம், மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு நிவாரணம், மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணம், மீனவ மகளீர் சேமிப்பு மற்றும் நிவாரணம், உள்நாட்டு மீன்வள மேம்பாட்டு திட்டங்கள் உள்ளிட்ட துறையின் பல்வேறு திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வுக் கூட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மீனவர் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தவும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட திட்டப்பணிகளை விரைந்து முடிக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, அரசுச் செயலாளர், டாக்டர் ந.சுப்பையன், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் ,திருமதி இரா.கஜலட்சுமி ,இ.ஆ.ப, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu